# யான் கண்ட குமார்கள்!



பள்ளிப் படிப்பைத் தொட்டுத் தொடங்குகையில் குஞ்சு எனவாய்,
குவலயம் போற்றிய விஜயகுமார், பள்ளிக் காலத்தில்; இறுதியில்,
இணைந்த இனியன் இராஜகுமார், ஒட்டகுடியில் ரவி என்னும்,
முத்துக் குமார், அவர் முகவரிசொல்லும் சங்கர்பிள்ளை குமார்,

அவர் அடுத்த வீட்டு ஜோதிமகன் அசோக்குமார் அடுத்த
மில்லின் கலியபெருமாள் குமார்! அடுத்து, நடராஜப்
பிள்ளையின் சிவக்குமார், அசோக்குமார், வெங்கட் அய்யரின்
காலமான சிவக்குமார், கல்லூரியின் நினைவில் கருப்பு குமார்,

கண்ணாடி குமார், இந்தியன் வங்கியில் இணைந்த
இராஜகுமார், என்மைத்துனன் வடகை, செந்தில் குமார்,
அடுத்த வீட்டு அண்ணன் ஜெயக்குமார், அவர் அண்ணன்
மகன், பால குமார், தேவூர் அண்ணன் சிவக்குமார்,




இலுப்பூரிலும் ஒரு அன்பின் அண்ணன் ஜெயக்குமார்,
இப்படியாக உறவின் முறையில் அத்திக்கோட்டை
ஜெயக்குமார், அடுத்து அருணகுமார், போரூர் குமார்,
பொழிச்சலூர் ஆனந்த குமார், சீர்காழி முத்துக்குமார்,

கீவளூர் இராஜாவின் மக்கள், அருண்குமார், பரத்குமார்
அண்ணன் மகன் இராம்குமார், அக்காள்கள் மகன்கள்
முத்துக்குமரன், நந்தகுமார், செந்தில்குமார், விஜயா
அக்காவின் மகன்கள் சிவக்குமார், நந்தகுமார்

ராஜி அக்காளின் இளையமகன் செல்வகுமார்!
பாண்டியில் குமார், சுகுமார்நன்னிலம் கொண்ட,
ஜெயக்குமார், நந்தகுமார், ஆகியரோடு, முகநூலில்
கண்ட இரத்தினக்குமார், காலமான மைத்துனர்

கண்ணகியின் குமார், தம்முடன் இன்னொரு மைத்துனர்,
கவிஞர்திலகம் இரவிக்குமார், மருமகன், தங்கை வாசுகியின்
மகன் சதீஷ் குமார் பனசை சிவக்குமார் முருகையன் ஈறாக,
ஆரூரில் ரேவதியின் குமார், பேரளம் மாமா சொக்கப்பாவின்,



மகன் அருண்குமார், மைத்துனர் மோகன்குமார், மகனாகும்
செந்தில் குமார், அறிந்தவோர் அச்சிரப்பாகம் செல்வகுமார்!
சுங்கத்துறையிலும், கெழுதகை நண்பர் இரவிக்குமார்,
கவிஞர் இராமகுமார், அன்பின் இளவல் சூரியகுமார் பிரபு,

விழுமிய அன்பின் பெருமகன் அருண்குமார், அடுத்ததாய்,
தழுவிய அன்பின் தகைவுசால் பாலகுமார்; பாபுகுமார் ஜேக்கப்
தமிழால் அணைத்த ஆனந்தகுமார் சவலம்; நினைவில் நிறைந்த
சேலத்து சிவக்குமார், இவரோடு வீரமணி சீடன் சிவக்குமார்;

ஆதிநாள் நட்பின் வெங்கட்குமார், நேசக்குமார், அசோக்குமார்,
கவிஞர் அசோக்குமார் அன்பின்சீர் உதயகுமார், மிலிடரி இராஜகுமார்,
ஆட்ட வீரன் ஆனந்தகுமார், இந்திரக் குமார், இ.டி.ஐ செல்வகுமார்,
வல்லோன் கலைக்குமார், கிருஷ்ண குமார் அன்பர் TMY குமார்,



சீர்வளர் செந்தில் குமார், விஜயகுமார்,ஹவில்தார்குமார்,
ஆய்வாளர் விஜயகுமார், நினைவில் வாழும் பி. மோகன்குமார்,
டி.சி. நந்தகுமார், ஓட்டுநர் குமார், தடதடவென்றே தன்கருத்தைப்
பகிரும் அனில்குமார் ரெட்டி!தண்மையால் நிறைந்த பிரஜெஷ் குமார்;

அன்பர், சுனில் குமார், இன்னும் சிலராம், சொக்கீந்தர் குமார்,
குமிழ்சிரிப்பின் மன்னன்சிந்தனையாளர் அருண்குமார் ஷர்மா,
பின்னாள் இணைந்த இளையர்கள், பங்கஜ்குமார், பிரமோத்
குமார், வினோத்குமார் சௌராசியா, பிலோகுமார், ஹேமந்குமார்,

சுங்கத்துறைகேண்டீன் ஜெயக்குமார், திகட்டாமல்
தன்கருத்தைச் சொல்லும் ஜெயக்குமார்,அறிந்தவோர்
அரவிந்குமார் அத்தோடு பிஸ்கட் விற்கும் ஊதுவத்தி
ஜெயக்குமார், எங்களூர் இராமநாதன் குமார்,



பிரஷாந்த் குமார் கக்கர்லால், முகேஷ் குமார்
இப்படியாக திருச்சியிலும் இரவிக்குமார், இராஜ்குமார்
மோஸஸ், சுமித்குமார், கஷ்மீர்குமார்,எனவும் தொடர,
கலால் துறை குமார்,ஆணையர் மயன்குமார்; மேதகு

துறையின் தலைவர், அஜீத்குமார் இவர்களுடன்
எங்கள் சேரநாட்டுச் செம்மல் சசிக்குமார், கிஷோர்குமார்,
கோபகுமார், என்பவரானார். கணினி பயன்பாட்டியல்
படிப்போடு இரண்டு பாலகுமார்கள்,நினைவில் பதிவில்

நிறைந்தது, நெஞ்சத்துஅன்பால் நிறைந்த இலலிதகுமாரி,
உறவினர், விஷ்ணு குமாரிசம்பந்தி தேவிகுமாரி கவிதையுலகில்

வான்முகில் என்னும் பேராசிரியர் சரவணக்குமார்,
அவர்தம் வீட்டிலும் சிலகுமார்கள் உண்டாம் என்ப!



கவிச்செம்மல் பொன்னடியின் செல்வன் லெனின் குமார்
பக்கத்து வீட்டு அன்பின்இரமேஷ் குமார் அவர்தம்
அண்ணன் சுரேஷ் குமார், இருவரின் பிள்ளைகளாய்
சபரீஷ் ஈறாக நான்கு குமார்கள் களோடு, பின் வீட்டு

முத்துக்குமார், எதிர்வீட்டுக் கிருஷ்ணகுமார், ஆட்டோ,
நாயகர்கள், தளபதி குமார், ஸ்ரீதரின் குமார், கவுன்சிலர்
மணிமேகலையின் குமார்,மரவேலை ஐயப்பனின், சீலர்
சசிக்குமார், சிவக்குமார், சிவாடைம்ஸ் சிவக்குமார்ஆக



அடுத்துச்சுங்க இல்லத்து முகவர் தனிலே, குமார்கள்!
ஆதிநாள் கண்ட பீகேயென் குமார் என்னும் குமாரவேல்!
அடுத்து கண்ட பரமசிவநாடாரின் குமார், இவரது,
இணையராம் இன்னொரு நிறுவனத்தின் சிவக்குமார்!

புனைகதை பேசும் மன்னை செல்வகுமார், சினிமா
சொல்லும் செல்வகுமார், நடேச ஐயரின் செந்தில்குமார்;
இன்னும் இரண்டு இரவிக்குமார்கள், உல்லாஷ் குமார்,
பின்னாளில் அறிந்த, ஆறுமுகத்தின் அண்ணன்,

சாந்த குமார், மர்ஸ்க் இராஜகுமார், ஏரோ ஷிப்பிங்,
சிவக்குமார், இவரோடு இன்னும்சில சிவக்குமார்கள்!
அடுத்து அந்நாள் கே.பி. எஸ் மணியன் அலப்பறை குமார்!
இன்சுரன்ஸ் **விஜயகுமார்** ஆக, இன்னும்சிலர், இருக்கலாம்!



என்றோ ஒருநாள், அலைபேசி தன்னில் தேடியபோது,
ஒன்றாய் நிறைந்த குமார்களை மனமும் கோத்திட,
பின்புலமானவன் முத்துக் குமாரசாமி ஆகிய முருகக்கடவுள்!
நின்றதாம் நினைவுகள் கவிதை வரிகளால் நிறைந்து!

**கு.ப.அசோகன்,**
13/20-04-2021(26-07-2021/15-09-2021)